மதுரை–ராமநாதபுரம் நான்கு வழிச்சாலையில் மரக்கன்றுகள் நடும் பணி

சிவகங்கை கலெக்டர் தொடங்கி வைத்தார்

மானாமதுரை, அக் 19

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் மரக்கன்றுகள் நடும் பணி அண்மையில் தொடங்கப்பட்டது. மதுரை– ராமநாதபுரம் நான்கு வழிச்சாலையில் நரிக்குடி விலக்குப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி தலைமை வகித்தார் மேலும், மரக்கன்றுகளை நட்டு வைத்து அதற்கானப் பணியை தொடங்கிவைத்தார்.

5 ஆயிரம் மரக் கன்றுகள் மதுரை ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தேசிய நெடுஞ் சாலைத் துறை மதுரை மண்டல அலு வலர் கோவிந்த சாமி, திட்ட இயக்குநர் கைலாஷ் லோகியா உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அம்பை பகுதியில்

பனை விதைகளுக்காக நேர்த்தி செய்யும் பணி

இதுவரை 16 ஆயிரம் பனை விதைகள் நடவு

அம்பை, அக்19–

கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையினால், பனைமரங் களில் நல்ல பழுத்த நிலையிலுள்ள பனம்பழங்கள் அதிகம் விழுந்து கிடப்பதை அறிந்து அதிகாலையிலேயே பனம் மரங்களைத் தேடி அலைந்து திரிந்து ,பனம்பழங்களை விதைக்காக சேரிக்கப் பட்டது.

சேகரித்த பனம்பழங்களை 2 இடங்களில் வைத்து, அன்றே பிரிந்து, உலர்த்தி பின் நேத்தி செய்யும் பணியினை, நல்ல முறைப்புத்திறன் கூடுவதற்காக விதைகளை முறைப்படுத்தும் பணியில் சமூக ஆர்வலர் கிரிக்கெட் மூர்த்தியுடன் இணைந்து மலை சுந்தரம், செல்லத்துரை ஆகியோர் விரைவாக உலர்ந்த பனை விதைகளை,உரிய இடத்திற்கு எளிதாக தூக்கிசெல்ல ஏதுவாக சாக்குப்பைகளில் நூறு நூறாகக் கட்டிவைக்கப்பட்டது. நேர்த்தி செய்த பனைவிதைகள் 4910 ஆகும். கடந்த 3 நாட்களுக்கு முன் இதே முறையில் சேகரித்து பக்கு வப்படுத்தப்பட்ட பனைவிதைகள் 5100 ஆகும். ஆக மொத்தகையிருப்பு 10010 விதைகள் இனிவரும் நடவுக்காக உள்ளது. இவைகளை முறையாக அம்பை, சிங்கை, மன்னார்கோயில், வாகைக்குளம், சிவந்திபுரம், கல்லிடை பகுதிகுளம், குட்டை கால்வாய், சிறு ஓடை, மறுகால் ஓடை, தாமிரபரணி ஆற்றங்கரை களில், சாலைகளில் ,தொடர்ந்து நட்டு வர திட்டமிட்டுள்ளது. இது வரை 16,970 பனை, விதைகளை, மேற்கண்ட ஊர் பகுதி, நீர்நிலைகள், மற்றும் சாலைகளில் நடப்பட்டுள்ளன. இந்த பணிக்கு பனை விதைகளை நடுவதில் சிறுமளஞ் சி ஆனந்தம் மகன் D.A.மகாஜோதி, N.S.S அதிகாரி , ஆனந்தம் டிரஸ் சார்பில் உதவி செய்தார்கள்.

கேரளாவில்

12 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த லாரி டிரைவர் கைது

தேனி போலீசார் நடவடிக்கை

தேனி,அக்.19

தேனி அருகே கோடாங்கிபட்டியைச் சேர்ந்தவர் அழகுராஜா. இவர் கடந்த 02.10.2013 ஆண்டில் இவரது மனைவி செல்வலட்சுமியை பைக்கில் ஏற்றிக் கொண்டு தேனி நேரு சிலை முன்பாக சென்றுள்ளார்.

அப்போது லாரியை வேகமாக அஜாக்கிரதையாக ஓட்டி வந்தவர் பைக் மீது மோதியதில் கணவன், மனைவி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

பின்னர் இது தொடர்பாக தேனி போலீசார் லாரி டிரைவரான கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் சாக்கு பள்ளம் அருகே அணைக்காரா பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் குட்டி மகன் சதீஷ் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

பின்னர் இது குறித்து வழக்கு தேனி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

ஆனால் லாரி டிரைவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்தவருக்கு, நீதிபதி பிடிவாரண்ட பிறப்பித்தார்.

இதையடுத்து மாவட்ட எஸ்.பி. உத்தரவின் பேரில் எஸ்.ஐ .இளங்குமரன் தலைமையிலான போலீசார் தனிப்படை அமைத்து டிரைவரை தேடி வந்த நிலையில் அவரை கேரள மாநிலத்தில் அவரது ஊர் பகுதியில் பதுங்கி இருந்த வரை கைது செய்து நேற்று அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

அழகப்பா பல்கலைக்கழகத்தில்

தொழில் முனைவோருக்கான சிறப்பு கருத்தரங்கம்

காரைக்குடி,அக்.19–

அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோருக்கான சிறப்பு செமினார் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தொழில் உலகில் முன்னேற்றம் கண்டவர் மற்றும் வாழ்வியல் அனுபவத்தின் மூலம் பிறருக்கு ஊக்கமாக இருப்பவர் திரு. சி. திருஞானம், TNC Bricks, காரைக்குடி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உரையாற்றினார். MBA துறையில் பயிலும் மாணவர்களுக்கான இந்த நிகழ்ச்சியை AIM இயக்குநர் டாக்டர் எஸ். சந்திரமோகன் தலைமையேற்றார்.

வரவேற்புரையை டாக்டர் கே. சந்திரசேகர் வழங்கினார்.

தொடக்க உரையை நிகழ்வின் பிரதான விருந்தினராக tmc மார்க்கெட்டிங் நிறுவனர் திரு. திருஞானம் வழங்கிய போது தொழில் முனைவோராக உருவாக விரும்பும் இளைஞர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான அடிப்படை திட்டமிடுதல், கடன் மற்றும் அரசு உதவித்திட்டங்கள், சந்தை நிலை புரிதல் மற்றும் சவால்களைக் கடக்கும் மனப்பக்குவம் ஆகியவற்றை விரிவாக எடுத்துரைத்தார்.

"வெற்றிகரமான தொழில் தொடக்கம் என்பது முதலீட்டுடன் துவங்கும் ஒன்றல்ல, உறுதியான எண்ணத்துடன் துவங்கும் ஒன்று" என அவர் வலியுறுத்தினார். மாணவர்கள் தொடர்ந்து கேள்விகள் எழுப்ப, அவர் தன்னுடைய தொழில் அனுபவங்களை பகிர்ந்து இளைஞர்களை ஊக்கப்படுத்தினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பிரொஃப். எஸ். ராஜமோகன் கலந்து கொண்டார்.

தொழில்மற்றும்புதுமை மைய பொது மேலாளராக உள்ள திரு. என். எஸ். கிருஷ்ணன் முக்கிய உரையாற்றினார். நன்றி உரையை மாணவர் ஒருங்கிணைப்பாளர் மிஸ். எம். தர்ஷினி வழங்கினார்.

வருகிற 31–ந் தேதிக்குள்

மக்கள் நீதிமன்றத்தில் காலியாக உள்ள பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்

சிவகங்கை நீதிபதி தகவல்

சிவகங்கை.அக்.19

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு செயல்திட்டத்தின்படி முதன்மை மாவட்ட நீதிபதி K. அறிவொளி அறிவுரையின்படியும், சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் காலியாக உள்ள ஒரு உறுப்பினர் பணியிடத்திற்கு பணி நியமனம் செய்ய பொதுமக்கள் தொடர்புடைய துறைகளான,

போக்குவரத்துத்துறை, தபால், தந்தி, தொலைதொடர்புத்துறை, மின்சாரத்துறை, மருத்துவத்துறை, இன்சூரன்ஷஸ் காப்பீடு நிறுவனம், கல்வி நிறுவனம், வீட்டு வசதி மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற அரசுத்துறைகள், அரச சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற அரசு இதழில் பதிவுபெற்ற அலுவலர் 62 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் பெயர், பாலினம், முகவரி, கல்வித்தகுதி, பணியின் விபரம், பணியில் சேர்ந்த நாள், பணி ஓய்வு பெற்ற நாள், பணியாற்றிய காலம் போன்ற விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் வந்து சேர வேண்டிய நாள்: 31/125 மாலை 5.45 மணிவரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சிவகங்கை என்ற முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கலாம் என்ற தகவலை தெரிவித்துக்கொள்கிறோம்.

கம்பம் அருகே

அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்

கம்பம், அக் ,19

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் உத்தரவுப்படி மாவட்ட சுகாதார அலுவலர் ஆலோசனையின் படி கம்பம் அருகே உள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் மனித சமுதாயத்திற்கு புகையிலைனால் ஏற்படும் தீங்கு குறித்தும் புகையிலை ஒழிப்பது குறித்தும் 3.0 என்ற தலைப்பில் சுமார் எட்டு வாரங்களாக மருத்துவர் முருகானந்தம், மருத்துவர் ஷிபாயா, அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவர் சிராஜுதீன் சுகாதார ஆய்வாளர்கள் அன்புநிதி, தினேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் சிறப்பான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பொதுமக்கள் சுகாதார காவலர்கள், மஸ்தூர் பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

களக்காட்டில் மோதல்

தொழிலாளி உள்பட 2 பேருக்கு வெட்டு

6 பேர் மீது வழக்கு

களக்காடு, அக்.19

களக்காடு கோட்டைத் தெருவை சேர்ந்தவர் கூலித் தொழிலாளி. இவர் களக்காடு வியாசராஜபுரத்தை சேர்ந்த கட்டிட தொழிலாளியான ஷேக் முகைதீன் மகன் அமீர்ஜமால் (25) என்பவரும் வேலைக்கு சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் தற்போது வேலை இல்லாததால் காலித்தை அமீர்ஜமால் வேலைக்கு அழை த்து செல்லவில்லை.

இதனால் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதில் காலித்தை அமீர்ஜமால் தாக்கினார். இதையடுத்து காலித் தனது நண்பரான களக்காடு பாரதிபுரத்தை சேர்ந்த 17 வயது சிறுவனிடம் இதுகுறித்து கூறியு ள்ளார். அந்த சிறுவன், அமீர்ஜமாலிடம் சென்று காலித்தை தாக்கியதை பற்றி தட்டி கேட்டார். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றியதால் ஆத்திரம் அடைந்த அமீர்ஜமால் 17 வயது சிறுவனை அரிவாளால்வெட்டினார். இதற்கு பதிலாக 17 வயது சிறுவன், அவரது நண்பர்களாக ஆவுடைவிலாசம் தெருவை சேர்ந்த இன்பராஜ் மகன் சிவா என்ற சிவசங்கர் (24), அய்யா கோயில் தெருவை சேர்ந்த வானுமாமலை மகன் முத்துராமன் (25) 15 வயது மற்றொரு சிறுவன், தங்கம்மன்கோயில் தெருவை சேர்ந்த மாரியப்பன் மகன் சக்தி (19) ஆகியோர் சேர்ந்து அமீர்ஜமாலை அரிவாளால் வெட்டினர். அத்துடன் இரும்பு கம்பியாலும் தாக்கினர். இதில் காயமடைந்த 17 வயது சிறுவனும், அமீர்ஜமாலும் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதுபற்றி புகாரின் பேரில் களக்காடு போலீசார் 17 வயது சிறுவன், அமீர்ஜமால், சிவா என்ற சிவசங்கர், முத்துராமன் , 15 வயது மற்றொரு சிறுவன், சக்தி ஆகிய 6 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குமரியை ஒட்டி உள்ள

அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி

தென் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை,அக்.19–

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, கேரள கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும். இது, மேற்குவட மேற்கு திசையில் நகர்ந்து, இந்நிலையில் அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாகவும், இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வரும் 24ம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது என்றும், அது மேற்கு வடமேற்கு திசையில் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து மேலும் வலுவடைய கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வுமையம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கிளிக்ஸ் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (கிளிக்ஸ்) பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: W2/14, 1வது தளம், மேற்கு படேல் நகர், டெல்லி, 110008 — **உடைமை அறிவிப்பு** (இணைப்பு IV) விதி 8(1)

கிளிக்ஸ் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி. (கிளிக்ஸ்), நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் முறையாக இணைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட, W2/14, 1வது மாடி, மேற்கு படேல் நகர், டெல்லி, 110008 என்ற முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது, நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பத்திர வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (54 OF 2002) (இனிமேல் "சட்டம்" என்று குறிப்பிடப்படுகிறது) விதிகளின் கீழ் மற்றும் சட்டத்தின் பிரிவு 13(2) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதி, 2002 இன் விதி 3 உடன் படிக்கப்பட்டது, பின்வரும் கடன் வாங்குபவர்கள் மற்றும் இணை கடன் வாங்குபவர்களுக்கு அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டது. கடன் வாங்குபவர்/உத்தரவாதம் அளிப்பவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை (அமலாக்க) விதிகள், 2002 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளின்படி கையொப்பமிட்டவர் கையகப்படுத்தியுள்ளார் என்று கடன் வாங்குபவருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. குறிப்பாக கடன் வாங்குபவர் மற்றும் பாதுகாப்பு வட்டி விதி 8 உடன் படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 இன் (4) பொது மக்கள் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் "கிளிக்ஸ்" மற்றும் அதன் மீதான வட்டி பிற கட்டணங்களுக்கு உட்பட்டது. பாதுகாக்கப்பட்ட சொத்தை மீட்டுக்கொள்ள, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப்பிரிவு (8) இன் விதிகளுக்கு கடன் வாங்குபவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடன் வாங்குபவர்/இணை கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. திரு. பால கிருஷ்ணன் S/O மணி, 2. திருமதி. நாகம்மாள் W/Oசந்திரன், இருவரும் 6/600, செல்வகுமாரசாமி நகர் ஒத்தப்பநாடு, பெருமாநல்லூர், கருணாம்பதி (தபால்) திருப்பூர், தமிழ்நாடு- 641666, பழைய எண். 109/2, RE SF â¡ÿ. 62/1A1A1A1, தள எண். 3, மேற்குப் பகுதி மற்றும் 4, ஸ்ரீ செல்வ குமாரசாமி நகர் வெள்ளியம்பதி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஒன்றியம், குன்னத்தூர் எஸ்ஆர்ஓ மற்றும் திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 638812, எஸ்ஆர் எண். 1 மேலும் முகவரி: 205/B அய்யம்பாளையம், PN சாலை நெருப்புபீச்சல் திருப்பூர், தமிழ்நாடு - 641666

கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.06.2025, **உடைமை தேதி:** 16.10.2025 **கோரிக்கை அறிவிப்பு தொகை:** ரூ. 27,97,378.16/- 22.06.2025 அன்று

சொத்தின் விவரங்கள்: பழைய SF எண் 109/2 RE SF எண் 62/1A1A1A1 இல் அமைந்துள்ள சொத்தின் அனைத்து துண்டுகள் மற்றும் பகுதிகள். தள எண். 3 மேற்கு பகுதி மற்றும் 4. ஸ்ரீ செல்வ குமாரசாமி நகர் வெள்ளியம்பட்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஊத்துக்குளி கிராமம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் எஸ்ஆர்ஓ மற்றும் திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 638812

கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி 1. M/S. Kks **பாலி பேக்ஸ் அதன் உரிமையாளர் திருமதி. ஷாஜிதா பேகம் எம், எண். 39,** Lrg லேஅவுட் கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர், தமிழ்நாடு- 641607, **2. திருமதி. ஷாஜிதா பேகம்** M D/O **அமீர் ஜான், 3. திரு. கர்னராஜாஜா** R S/O **ராம்லிங்கம்,** No R/O3/2 எண்:158, ஸ்ரீ பாலாஜி நகர், முத்தனம்பாளையம், திருப்பூர், தமிழ்நாடு- 641604, **அனைத்தும்** இங்கு: எஸ்.எஃப்.எண்: 453/2a, பட்டா எண்: 336, தள எண்:158 (வடக்கு பகுதி), "ஸ்ரீ பாலாஜி நகர்", முத்தனம்பாளையம் கிராமம் - பஞ்சாயத்து, திருப்பூர் தெற்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாவட்டம், திருப்பூர் 641609

கோரிக்கை அறிவிப்பு தேதி: 11.08.2025, **உடைமை தேதி:** 17.10.2025 **கோரிக்கை அறிவிப்பு** தொகை ரூ. 44,32,732/- 14.08.2025 நிலவரப்படி

சொத்தின் விவரங்கள்: திருப்பூர் பதிவு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளும் பார்சல்களும் திருப்பூர் கூட்டு பதிவு மாவட்டம் திருப்பூர் தெற்கு வட்டம் முத்தனம்பாளையம் கிராமத்தில் உள்ள S.F.No.453/2,459,460,453/1 (Sf எண். 453/2 இல் அமைந்துள்ள இந்த சொத்து) நிலம் தளவமைப்பாக மாற்றப்பட்டு வீட்டு தளமாகப் பிரிக்கப்பட்டு "ஸ்ரீ பாலாஜி நகர்" என்று பெயரிடப்பட்டுள்ளது, இதில் தள எண். 158 இன் வடக்குப் பகுதி எல்லையாக உள்ளது மேற்கு 30 அடி அகலம் வடக்கு தெற்கு லேஅவுட் சாலை, தள எண். 158 இன் தெற்குப் பகுதிக்கு வடகே, தள எண். 157 இன் ஒரு பகுதிக்கு கிழக்கே, தள எண். 159 இன் தெற்கே, நடுவில், கிழக்கு மேற்கில் இருபுறமும் 60 அடி, வடக்கு தெற்கே இருபுறமும் 20 அடி, பரப்பளவு 1200 சதுர அடி அல்லது 111.48 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதன் வழக்கமான பொதுவான பாதை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து உபகரணங்களின் உரிமைகளையும் உள்ளடக்கியது, மேலே உள்ள சொத்து S.F.No.453/2a1a இல் அமைந்துள்ளது

இடம்: தமிழ்நாடு, தேதி: 19.10.2025 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளிக்ஸ் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்.

ICICI Home Finance — **கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா
கிளை அலுவலகம்: லயன் ஆர்கேட், 1ஏ, 1வது தளம், மதுரை சாலை, மேற்குத் தெரு, சிந்தபூந்தரை, திருநெல்வேலி - 627001

[விதி 8(6)க்கான விதிமுறையைப் பார்க்கவும்] அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதி சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமலாக்குதல் சட்டம், 2002 இன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) இன் விதிமுறையுடன் படிக்கவும்.
பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து பாதுகாக்கப்பட்ட கடனாளியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது/வகுலிக்கப்பட்டுள்ளது, அதன் உரிமை ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது. லிமிடெட், கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, "எங்கு இருக்கிறதோ அப்படியே", "இருப்பது அப்படியே" மற்றும் "எது இருக்கிறதோ அது அப்படியே" என்ற வகைகளில் விற்கப்படும்;

வ எண்.	கடன் வாங்குபவர்(கள்)/ இணை கடன் வாங்குபவர்கள்/ உத்தரவாததாரர்கள்/ சட்ட வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண்.	தெரிந்த வில்லங்கங்களுடன் பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள், ஏதேனும் இருந்தால்	நிலுவையில் உள்ள தொகை	இருப்பு விலை — ஏர்னஸ்ட் பண வைப்பு	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்	ஏல தேதி மற்றும் நேரம்	ஏல தேதிக்கு ஒரு நாள் முன்பு	சர்ஃபேசி நிலை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)	(ஐ)
1.	ஜஸ்டின் எபினேசர் (கடன் வாங்கியவர்) ஜெனிஃபர் சோலமன் (இணை கடன் வாங்கியவர்) லேன் எண். LHCTB00001596332 & LHCTB00001600538	நா பிளாட் எண் 11, ஸ். எண் 132/1B2, எஸ்.எஸ். அந்தோணி பிள்ளை நகர், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு603202 சென்னை	ரூ. 25,05, 872.76/- அக்டோபர் 15, 2025	ரூ. 30,50, 460/- / ரூ. 3,05, 046/-	அக்டோபர் 28, 2025 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை	நவம்பர் 04, 2025 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை	நவம்பர் 03, 2025 பிற்பகல் 05:00 மணிக்கு முன்	உடல் உடைமை

ஆன்லைன் ஏலம் எங்கள் ஏல நிறுவனமான வேல்யூ டிரஸ்ட் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு https://BidDeal.in) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிப்பாளர்களுக்கு நவம்பர் 03, 2025 மாலை 05:00 மணிக்கு முன் மொத்த நிலுவைத் தொகையை கூடுதல் வட்டியுடன் செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, இல்லையெனில் இந்த பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் மேற்கண்ட அட்டவணையின்படி விற்கப்படும்.
வருங்கால ஏலதாரர்(கள்) நவம்பர் 03, 2025 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், அர்னெஸ்ட் பண வைப்புத்தொகை (EMD) RTGS/ டிமாண்ட் டிராஃப்டை (DD) (நெடுவரிசை E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) நவம்பர் 03, 2025 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு பிடவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிடவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை நவம்பர் 03, 2025 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியின் ஆஃப்லைன் நகலை சமர்ப்பிக்க வேண்டும். அர்னெஸ்ட் பண வைப்புத்தொகை (DD) தேசியமயமாக்கப்பட்ட/திட்டமிடப்பட்ட வங்கியிலிருந்து "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஏலம்" என்ற பெயரில் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தப்பட வேண்டும். அலுவலகம்
ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து 9920807300 என்ற எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளவும்.
மேலும் எந்த காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com ஐப் பார்வையிடவும்.

தேதி: அக்டோபர் 19, 2025 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்",
இடம்: செங்கல்பட்டு — **CIN எண்: U65922MH1999PLC120106**

UNITY Small Finance Bank — **யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**
கார்ப்பரேட் அலுவலகம்: செண்ட்ரம் ஹவுஸ், சிஎஸ்டி சாலை, வித்யாநகரி மார்க், கலினா, சாண்டாகுருஸ் (E) மும்பை - 400 098

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கீழே கையொப்பமிடப்பட்டவர், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 (2002 இன் 54) இன் கீழ் **யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**, மேலும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் பிரிவு 13(12) உடன் (விதி 3) உடன் படிக்கப்பட்டதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து நிலுவைத் தொகையை வசூலிக்க "ஆன்லைன் மின்ஏலம்" மூலம் விற்கப்படும் என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்கு பொது அறிவிப்பாகக் கூறுகிறோம். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற விதிமுறைகளைத் தவிர்த்து, சொத்து **"எங்கே இருக்கிறதோ அப்படியே", "எங்கே இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எங்கே இருக்கிறது"** என்ற அடிப்படையில் கண்டிப்பாக விற்கப்படும்.

கடன் வாங்கியவரின் பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி பாதுகாக்கப்பட்ட கடனின் தொகை (ரூபாயில்)	சொத்தின் விளக்கம்	ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	சொத்தின் மின்னணு ஏலத்தின் தேதி மற்றும் நேரம்	இருப்பு விலை (ரூபாயில்)	முன்பதிவு பண வைப்பு (ரூபாயில்)
**M/s. ரோஜர் கோட்யார்ன் கார்ப்பரேஷன் இந்தியா பிரைவேட் லிமிட